**2. ஆசாரியனாகிய ஏலி தன் பிள்ளைகளைக் கட்டுப்பாட்டுடன் வளர்த்தானா?**

1சாமுவேல் 3:13ல் ஆசாரியனாகிய ஏலி தன் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த தவறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதை முரண்படுத்தும் விதத்தில் 2ம் அதிகாரம் 23ம் 24ம் வசனங்களில் அவன் தன் பிள்ளைகளைக் கடிந்து கொண்டதை நாம் காணலாம். இதற்கான காரணம் யாது? **(யமுனா சற்குணன், லண்டன்)**

1சாமுவேல் 2:23-24ல் குறிப்பிட்டுள்ளவிதமாக ஏலி தன் பிள்ளைகளைச் சில சந்தர்ப்பங்களில் கடிந்துகொண்டுள்ளான் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், பிள்ளைகள் பெரியவர்களான பின்பே ஏலி அவர்களைக் கடிந்து கொண்டுள்ளதையே இவ்வசனங்கள் அறியத்தருகின்றன. ஆனால் தேவனுடைய நியாயப்பிரமாணக் கட்டளையின்படி (உபா.6:7, 21:18-21), பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும் காலத்தில் தேவனுடைய வார்த்தையின்படி ஏலி அவர்களைக் கண்டிப்புடன் வளர்க்காததினால், அவர்கள் பெரியவர்களானபோது, அவனுடைய வார்த்தைகளைக் கேட்கவில்லை. இதனால்தான் 1சாமுவேல் 3:13ல் ஏலி தன் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தத் தவறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிள்ளைகளுக்குச் சிறுவயதிலிருந்தே தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொடுக்காமல், அவர்கள் தவறு செய்யும்போது கண்டிக்கத் தொடங்கினால் அவர்கள் நம் பேச்சைக் கேட்கமாட்டார்கள்.

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, November, 2006